இந்திய உச்ச நீதிமன்றம்

2019–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 5–ஆம் நாள்

முன்னிலை

மாண்புமிகு நீதியரசர் முனைவர் திரு.தனஞ்ஜயா ஒய் சந்திர சூட்

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு.ரிஷிகேஷ் ராய்

உரிமையியல் மேல்முறையீடு எண் 9076/2019

பிஎஸ்இஎஸ் யமுனா
பவர் லிமிடெட் ...மேல்முறையீட்டாளர்

/எதிர்/

எஸ்.எச்.ஞான் ஷ்யாம்
சந்த் சர்மா மற்றும் பலர் ...எதிர்மேல்முறையீட்டாளர்கள்

பணிகள் சட்டம்:

ஓய்வூதியம் – உரிமை கோரல் – அந்த பணியாளர் ராஜினாமா செய்ததால், அவரது கடந்த காலப் பணிகளை இழந்துவிட்டார் என்ற காரணத்தால் மறுக்கப்பட்டது – இது எதிர்க்கப்பட்டது – அவரது ராஜினாமா கடிதத்தின் சட்டப்பூர்வ விளைவு விருப்ப ஓய்வாக இருப்பதால், அவர்

இருபது ஆண்டுகள் பணி முடித்திருப்பதால், பணியாளர் ஓய்வூதியப் பயன் பெற உரிமையுடையவர் என உயர்நீதிமன்றம் முடிவு செய்துள்ளது – உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு – தீர்வு: 'ராஜினாமா' மற்றும் 'விருப்ப ஓய்வு' ஆகிய இரண்டுக்கும் வேறுபாடு உள்ளது – ஓய்வூதிய விதிகளின்படி, ராஜினாமா என்பது கடந்த பணிக்காலத்தை இழக்க செய்வதை உள்ளடக்கியது – வரையறுக்கப்பட்ட காலத்திற்கு முன்னதாக கோரப்படும் விருப்ப ஓய்வு அவருக்கு மறுக்கப்பட்டுள்ளது என்ற காரணத்தின் அடிப்படையில், பணியாளர் ராஜினாமாவினைத் தேர்ந்தெடுத்தார் என்பதால், ஓய்வூதியப் பயனைக் கோர முடியாது – மத்திய குடிமைப் பணிகள் ஓய்வூதிய விதிகள், 1972 – விதி 26.

மேல்முறையீட்டை அனுமதித்து, இந்த நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு தீர்ப்பளித்தது.

தீர்வு: 1. மத்திய குடிமைப் பணிகள் ஓய்வூதிய விதிகள் 1972, விதி 26 ராஜினாமா செய்தால் ஒரு பணியாளர் அவரது கடத்த பணிக் காலத்தை இழக்கிறார் எனக் கூறுகிறது. முதல் எதிர்மேல்முறையீட்டாளர் விருப்ப ஓய்வுக்கு மனுச் செய்ய தேவையான பணிக் காலத்தை முடித்துள்ளாரா

என்பதல்லாமல், அவரது முடிவு ராஜினாமா செய்வதே அன்றி, விருப்ப ஓய்வு கோரும் முடிவல்ல. அவரது ராஜினாமாவை விருப்ப ஓய்வாக இந்த நீதிமன்றம் மறுவகைப்படுத்தினால், ராஜினாமா மற்றும் விருப்ப ஓய்வுக்கிடையே உள்ள கோட்பாடுகளின் வேறுபாட்டினை குழப்புவதாகவும் மற்றும் விதி 26 செயல்படுவதை பயனற்றதாக்கிவிடும். அத்தகைய அணுகுமுறை பின்பற்றப்படக்கூடாது. [பத்தி 12] [554–E–G; 555–A]

2. முதல் எதிர்மேல்முறையீட்டாளர் 20 ஆண்டு காலப் பணியை முடிக்கவில்லை என்ற காரணத்தினால், முதல் எதிர்மேல்முறையீட்டாளரின் விருப்ப ஓய்வு மனு மேல்முறையீட்டாளரான பணி அமர்த்துநரால் மறுக்கப்பட்டுள்ளது. முதல் எதிர்மேல்முறையீட்டாளர் 20 ஆண்டுகள் பணிக்காலத்தை முடித்துள்ளதால், முதல் எதிர்மேல்முறையீட்டாளரின் விருப்ப ஓய்வை நிராகரித்த மேல்முறையீட்டாளரின் முடிவு சட்டத்திற்கு எதிரானது எனக் கூறப்பட்டுள்ளது. அவருக்கு விருப்ப ஓய்வு மறுக்கப்பட்டிருந்த போதிலும், முதல் எதிர்மேல்முறையீட்டாளர் அந்த முடிவை எதிர்க்கவில்லை, ஆனால் ராஜினாமா செய்துள்ளார்; விருப்ப ஓய்வை மறுத்துள்ளது, ராஜினாமாவினால் ஏற்படும் சட்டவிளைவுகளை மட்டுப்படுத்தாது. விருப்பு ஓய்வு

மறுக்கப்பட்டது குறித்த பிரச்சனையை முதல் எதிர்மேல்முறையீட்டாளர் எடுத்தார் என்று காட்டும் எந்தவொரு சாட்சியமும் பதிவில் வைக்கப்படவில்லை. மாறாக, முதல் எதிர்மேல்முறையீட்டாளர் மேல்முறையீட்டாளருக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பில் ராஜினாமா செய்ததை முதல் எதிர்மேல்முறையீட்டாளர் ஒப்புக் கொண்டுள்ளார். விருப்ப ஓய்வு மறுக்கப்பட்டு மற்றும் தொடர்ச்சியாக ராஜினாமா செய்து 13 ஆண்டுகளுக்கு பின்னர்தான் முதல் எதிர்மேல்முறையீட்டாளரின் நீதிப்பேராணை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த சூழ்நிலைகளில், முதல் எதிர்மேல்முறையீட்டாளர் ராஜினாமா செய்ததாக ஒப்புக்கொண்டுள்ளபோது, ஓய்வூதியப் பயன் கோர, இந்த நீதிமன்றம் முன்பு விருப்ப ஓய்வு மறுக்கப்பட்டதை கோர முடியாது. [பத்தி 13–14] [555–B–E]

3. எனவே, முதல் எதிர்மேல்முறையீட்டாளர் 20 ஆண்டுகள் பணிபுரிந்துள்ளாரா என்ற கேள்வியில் தற்போதைய பிரச்சனைக்கு எந்த சட்ட விளைவுகளும் இல்லை. முதல் எதிர்மேல்முறையீட்டாளர் 20 ஆண்டுகள் பணிபுரிந்திருந்தாலும் கூட, ம.கு.ப ஓய்வூதிய விதிகள், விதி 26–இன் கீழ் ராஜினாமா செய்ததால், அவரது கடந்த பணிக்காலம்

இழக்கப்பட்டதாக உள்ளது. எனவே, முதல் எதிர்மேல்முறையீட்டாளர் ஓய்வூதியப் பயனுக்கு உரிமையுடையவர் அல்ல.

முதுநிலை கோட்ட மேலாளர், எல்.ஐ.சி. /எதிர்/ ஸ்ரீ லால் மீனா (ஸ்ரீ லால் மீனா II") (2019) 4 எஸ்.சி.சி. 479 – சார்வுறப்பட்டது.

அஸ்கர் இப்ராஹிம் அமீன் /எதிர்/ எல்.ஐ.சி. (2016) 13 எஸ்.சி.சி. 797 – ஒதுக்கப்பட்டது.

முதுநிலை கோட்ட மேலாளர், எல்.ஐ.சி. /எதிர்/ ஸ்ரீ லால் மீனா ("ஸ்ரீ லால் மீனா I") (2015) 17 எஸ்.சி.சி. 43: [2015] 12 எஸ்.சி.ஆர். 158 – குறிப்பிடப்படுகிறது.

<u>பார்வையிடப்பட்ட தீர்முடிவுகள்</u>

(2016) 13 எஸ்.சி.சி. 797	ஒதுக்கப்பட்டது	பத்தி 3
[2015] 12 எஸ்.சி.ஆர். 158	குறிப்பிடப்படுகிறது	பத்தி 7
(2019) 4 எஸ்.சி.சி. 479	சார்வுறப்பட்டது	பத்தி 7

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு: உரிமையியல் மேல்முறையீடு எண் 9076/2019.

உரிமை பட்டய மேல்முறையீடு எண் 408/2017-இல் புதுடெல்லியில் உள்ள டெல்லி உயர் நீதிமன்றத்தின் 26.05.2017 தேதியிட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவிலிருந்து இந்த மேல்முறையீடு எழுதுகிறது.

மேல்முறையீட்டாளர்கள் சார்பாக மூத்த வழக்குரைஞர் சி.யு.சிங், வழக்குரைஞர்கள் அனுபம் வர்மா, நிகில் சர்மா, புக்ரம்பம் ரமேஷ் குமார், ராகுல் கின்ரா, கருண் சர்மா ஆகியோர் முன்னிலையாகினார்கள்.

எதிர்மேல்முறையீட்டாளர்கள் சார்பாக மூத்த வழக்குரைஞர் பரக் திரிபாதி, வழக்குரைஞர்கள் ஆர்.சி.கௌசிக், சுமீத் புஷ்கர்ணா, அலோக் குப்தா ஆகியோர் முன்னிலையாகினார்கள்.

இந்த நீதிமன்றத்தின் தீர்ப்பு **மாண்புமிகு நீதியரசர் முனைவர் திரு.தனஞ்ஜயா ஒய் சந்திர சூட்** அவர்களால் பகரப்பட்டது.

1. முதல் எதிர்மேல்முறையீட்டாளருக்கு ஓய்வூதியப் பயன்களை அளித்து, மார்ச் 21, 2017 தேதியிட்ட தனியமர் நீதிபதியின் தீர்ப்புரையினை, டெல்லி உயர் நீதிமன்றத்தின் நீதியர் ஈராயம் அதன் 26.05.2017 தேதியிட்ட உத்தரவில் உறுதி செய்துள்ளது. அவர் 20 காலம் பணி முடித்துள்ளார் மற்றும் பணியிலிருந்து விருப்ப ஓய்வு பெற்றுள்ளார் மற்றும் ராஜினாமா செய்யவில்லை என்ற காரணத்தினால், முதல் எதிர்மேல்முறையீட்டாளருக்கு ஓய்வூதியப் பயனை வழங்க மேல்முறையீட்டாளருக்கு தனியமர் நீதிபதியின் தீர்ப்பில் உத்தரவிடப்பட்டுள்ளது. மேல்முறையீட்டாளர், தற்போதைய மேல்முறையீட்டில், அந்த காண்முடிவுகளை எதிர்த்துள்ளார்.

2. எதிர்மேல்முறையீட்டாளர், 09.07.1968–இல் தினக்கூலி மஸ்தூராக நியமிக்கப்பட்டுள்ளார். அவரது பணி, 22.12.1971–இல் பியூன் பதவியில் வரன்முறைப்படுத்தப்பட்டுள்ளது. முதல் எதிர்மேல்முறையீட்டாளர், 07.07.1990 அன்று தனது ராஜினாமாவை தந்து, அது 10.07.1990 முதல் மேல்முறையீட்டாளரால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இரண்டு காரணங்களுக்காக ஓய்வூதியப் பயன் முதல் எதிர்மேல்முறையீட்டாளருக்கு மேல்முறையீட்டாளரால் மறுக்கப்பட்டுள்ளது. முதலில் அவர் 20

ஆண்டுகாலப் பணி முடிக்கவில்லை என்பதால், ஓய்வூதியம் பெற அவர் தகுதி பெறவில்லை. இரண்டாவதாக, எவ்வாறாயினும், ராஜினாமா செய்ததால், முதல் எதிர்மேல்முறையீட்டாளர் கடந்த பணிக்காலத்தை இழந்துவிட்டார் மற்றும் அதனால் ஓய்வூதியப் பயனை கோர முடியாது.

3. ராஜினாமா செய்ததால், முதல் எதிர்மேல்முறையீட்டாளர் அவரது கடந்த காலப் பணியை இழந்துவிட்டாரா என்ற இரண்டாம் கேள்வி தொடக்கத்திலேயே தீர்க்கப்பட வேண்டும். முதல் எதிர்மேல்முறையீட்டாளரின் ராஜினாமா கடந்த காலப் பணி இழப்பில் முடிந்திருந்தால், அவர் இருபதாண்டு காலப் பணி முடித்திருந்தாரா என்ற கேள்வி பொருத்தமற்றதாகிவிடும், ஏனெனில், அத்தகைய பணி இழந்ததாகவே இருக்கும். முதல் எதிர்மேல்முறையீட்டாளரின் ராஜினாமா கடிதத்தின் சட்டப்பூர்வ விளைவு 'விருப்ப ஓய்வு' என முடிவு செய்த டெல்லி உயர்நீதிமன்ற தனியமர் நீதிபதி, அஸ்கர் இப்ராஹிம் அமீன் /எதிர்/ எல்.ஐ.சி. [(2016) 13 எஸ்.சி.சி. 797] என்ற வழக்கில் இந்த நீதிமன்றத்தின் தீர்ப்பினை சார்ந்துள்ளார்.

4. அஸ்கர் இப்ராஹிம் அமீன் வழக்கில், மேல்முறையீட்டாளர், இந்திய ஆயுள் காப்பிட்டு கழகத்தில் (Life Insurance Corporation of India) 23 ஆண்டு காலப் பணி முடித்த பின், 1991–இல் ராஜினாமா செய்துள்ளார். மேல்முறையீட்டாளர் ராஜினாமா செய்த போது, விருப்ப ஓய்வை அனுமதிக்கும் வகைக்கூறு இல்லை. ஓய்வு பெறும்போது, ஓய்வூதியம் வழங்குவதற்கான நிபந்தனைகளை வகுத்தும் மற்றும் முதன்முறையாக பணியாளர்கள் 20 ஆண்டு பணி முடித்த பிறகு, விருப்ப ஓய்வு பெற அனுமதிக்கும், மத்திய அரசு பின்னர் இந்திய ஆயுள் காப்பிட்டு கழக (பணியாளர்கள்) ஓய்வூதிய விதிகள் 1995–யை, (எல்.ஐ.சி. ஓய்வூதிய விதிகள்) பிரகடனம் செய்துள்ளது. எல்.ஐ.சி. ஓய்வூதிய விதிகளின் கீழ், 1995–க்கு முன்னர் ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு ஓய்வின் போது ஓய்வூதியம் முன்தேதியிட்டு வழங்க வகை செய்யப்பட்டது, இருப்பினும், விருப்ப ஓய்வு குறித்து வகைக்கூறுகள் ஏதும் இல்லை. ராஜினாமா செய்வது கடந்த காலப் பணியை இழப்பதற்கு சமம் என்று எல்.ஐ.சி. ஓய்வூதிய விதிகளில் கூறப்பட்டுள்ளது. மேல்முறையீட்டாளர், எல்.ஐ.சி. ஓய்வூதிய விதிகளின் கீழ், ஓய்வூதியத்திற்கு உரிமை உடையவரா என முடிவு செய்யும்போது, இந்த நீதிமன்றத்தின் இரு நீதிபதிகளின் அமர்வு சார்பாக பேசிய மாண்புமிகு நீதியரசர் திரு.விக்ரமஜித் சென் முடிவு செய்ததாவது:

"16. [ஷீல்குமார் ஜெயின் /எதிர்/ நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட், (2011) 12 எஸ்.சி.சி. 197 என்ற வழக்கை குறிப்பிட்டு] ஒரு பணியாளரின் பணி முடிவு என்பது ராஜினாமா வழியான பணி முடிவா அல்லது விருப்ப ஓய்வு வழியிலான பணி முடிவா என்பதைக் கண்டறிய ஒவ்வொரு வழக்கிலும் சட்டப்பூர்வ வகைக்கூறுகளைக் கருத்தில் கொண்டு இந்த நீதிமன்றம் பொருள் கொள்ள வேண்டும் என்றும், மற்றும் சட்டப்பூர்வ வகைக்கூறுகளை பொருள் கொள்ளும் போது, சட்டப்பூர்வ வகைக்கூறுகளின் காரணத்தை மனதில் கொள்ள வேண்டும் என்றும் மேற்சொன்ன அதிகார அமைப்பு காட்ட வேண்டும்.

17. மேல்முறையீட்டாளர் அவரது பணி முடிவை 'ராஜினாமா' எனக் கூறியிருந்தார் என்பதற்காகவோ அல்லது அந்த நேரத்தில் விருப்ப ஓய்வு பெற வகைக்கூறு இல்லை என்பதற்காகவோ, மேல்முறையீட்டாளர் ஓய்வூதியப் பயன்பெற மறுக்கப்பட்டிருக்கக்கூடாது. முதுமையின் நெருக்கடி மற்றும் ஏற்றத்தாழ்வுகளை சமாளிக்க, ஒரு வகுப்பு மக்களுக்கு பயன்

விரிவுபடுத்தப்படுவதே ஓய்வூதிய விதிகளின் பாராட்டத்தக்க நோக்கமாகும் மற்றும் ஒரு வகுப்பிறகுள் உள்ள பயன் பெறுவோரிடையே பேதம் பார்க்கும் வண்ணம், சட்டப்பூர்வ வகைக்கூறுகளுக்கும் மற்றும் சட்டத்தின் ஒப்புக்கொள்ளப்பட்ட நோக்கத்திற்கும் ஏதாவது சில முரண்பாடுகள் இருப்பின், அந்த இரண்டுக்கும் இடையே உள்ள வேறுபாட்டை மட்டுப்படுத்தவும், முடிந்தவரை அவற்றை சரி செய்யவும் நீதி பரிபாலனம் கட்டாயப்படுத்தப்படுகிறது. சட்டப்பூர்வ வகைக்கூறுகளின் பாராட்டத்தக்க அம்சம் மற்றும் இந்திய அரசமைப்புச் சட்டம், வகைக்கூறு 14–ல் உறுதி செய்யப்பட்ட அடிப்படை உரிமைகள் ஆகியவற்றால் அல்லாமல், கடிதத்தின் அடிப்படையில் நாம் சென்றால், நாம் நமது கடமையிலிருந்து தவறியவர்களாவோம்."

(வலியுறுத்தப்படுகிறது)

5. மேல்முறையீட்டாளரின் கடிதத்தில் 'ராஜினாமா' என்ற சொல் பயன்படுத்தியிருந்தாலும், பணி முடிவு 'ராஜினாமாவா' அல்லது 'விருப்ப ஓய்வா' என்பதை நீதிமன்றம் தனியாக நிர்ணயிக்க வேண்டும் என்று அஸ்கர் இப்ராஹிம் அமீன் வழக்கில் நீதிமன்றம் முடிவு செய்துள்ளது.

அஸ்கர் இப்ராஹிம் அமீன் வழக்கின் மேல்முறையீட்டாளர் நிர்ணயிக்கப்பட்ட பணி ஆண்டுகளை பூர்த்தி செய்திருந்தாலும், மற்றும் அவர் ராஜினாமா செய்த நேரத்தில் விருப்ப ஓய்வு என்பதற்கு வகைக்கூறு ஏதும் இல்லாததாலும், மேல்முறையீட்டாளர் உண்மையில் விருப்ப ஓய்வு பெற்றுள்ளார் மற்றும் ராஜினாமா செய்யவில்லை என நீதிமன்றம் முடிவு செய்தது. எல்.ஐ.சி. ஓய்வூதிய விதிகள் ஓய்வு குறித்த வகைக்கூறுகளுக்கு மட்டும் முன் தேதியிட்டு பொருந்தும் மற்றும் விருப்ப ஓய்வு பொறுத்தவரை முன்தேதியிட்டு வகைக்கூறுகள் அளிக்கப்படவில்லை. இருப்பினும், விருப்ப ஓய்வு அல்லது ராஜினாமா குறித்து வழக்கு உள்ளதா என்று நீதிமன்றம் நிர்ணயிக்க வேண்டும் மற்றும் இந்த முடிவின் விளைவு, விருப்ப ஓய்வு வகைக்கூறுகளுக்கு முன்தேதியிட்டு பொருந்த வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. மாண்புமிகு நீதியரசர் திரு.விக்ரமஜித் சென் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

> "11. எல்.ஐ.சி. இந்தியா (பணியாளர்) ஒழுங்குமுறை விதிகள் 1960, ஒழுங்குமுறை விதி 19 (2–A)–ன் கீழ் அவர் விருப்ப ஓய்வு கோரியிருக்கக் கூடாது என குறிப்பிட்டு, அந்த சம்பந்தப்பட்ட தேதி மற்றும் நேரத்தில், அதாவது, 29.01.1991 இல், ராஜினாமா தருவது

தவிர அவருக்கு வேறு மாற்று இல்லை என்ற மேல்முறையீட்டாளரின் வாதத்திற்கு எதிராக எதிர்மேல்முறையீட்டாளர் – கழகம் எதிர்வாதம் செய்தது. அது அவ்வாறாயின், எதிர்மேல்முறையீட்டாளர் மாதிரி பணி அமர்த்துநராக இருப்பதால், இந்த ஒழுங்குமுறையின் பயனை மேல்முறையீட்டாளருக்கு நீட்சி செய்து, அதன் மூலம் அவரது ஓய்வூதிய உரிமையைக் காத்திருக்க வேண்டும். இருப்பினும், 01.11.1993 முதல் ஓய்வூதிய திட்டம் அமலுக்கு வந்த பிறகு, அதாவது, ஒழுங்குமுறை விதி 19 (2–A), உண்மையிலேயே, இந்திய அரசு இதழில் 16.02.1996 அன்று அறிவிக்கப்பட்டுள்ளதால், எதிர்மேல்முறையீட்டாளரின் வாதத்தில் நாங்கள் எந்த பொருளையும் காணவில்லை."

(வலியுறுத்தப்படுகிறது)

6. தற்போதைய வழக்கில், முதல் எதிர்மேல்முறையீட்டாளர் ஓய்வூதியப் பயனுக்கு உரியவர் என முடிவு செய்ய அஸ்கர் இப்ராஹிம் அமீன் வழக்கின் முடிவினை டெல்லி உயர்நீதிமன்ற தனியமர் நீதிபதி சார்ந்துள்ளார். எதிர்மேல்முறையீட்டாளர் 20 ஆண்டுகளுக்கு மேல்

பணிபுரிந்துள்ளார் மற்றும் விருப்ப ஓய்வில் ஓய்வூதியம் பெற தகுதி உடையவர் என தனியமர் நீதிபதி குறிப்பிட்டுள்ளார். எனவே, முதல் எதிர்மேல்முறையீட்டாளர் 'ராஜினாமா' என்ற சொல்லை பயன்படுத்தி இருந்தாலும், வழக்கின் பொருண்மைகளை தனியாக முடிவு செய்யும்போது, தனியமர் நீதிபதி, அவர் விருப்பத்துடன் பணியிலிருந்து ராஜினாமா செய்துள்ளார் என முடிவு செய்துள்ளார்.

7. அஸ்கர் இப்ராஹிம் அமீன் வழக்கில் நீதிமன்றத்தின் அணுகுமுறை சரியானதுதானா என்பது, முதுநிலை கோட்ட மேலாளர், எல்.ஐ.சி. /எதிர்/ ஸ்ரீ லால் மீனா ("ஸ்ரீ லால் மீனா I") [(2015) 17 எஸ்.சி.சி. 43] என்ற வழக்கில் இந்த நீதிமன்றத்தின் ஒருங்கிணைந்த ஆயத்தால் கேள்விக்குள்ளாக்கப்பட்டு, பெரிய அமர்வுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதன் பின்னர், இந்த நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு அமைக்கப்பட்டு, அஸ்கர் இப்ராஹிம் அமீன் வழக்கில் எடுக்கப்பட்ட முடிவை மறுத்துவிட்டு, முதுநிலை கோட்ட மேலாளர், எல்.ஐ.சி. /எதிர்/ ஸ்ரீ லால் மீனா ("ஸ்ரீ லால் மீனா II") [(2019) 4 எஸ்.சி.சி. 479] என்ற வழக்கில் தீர்ப்பு வழங்கியது. அந்த இரு தீர்ப்புகளும் பதிவில் வைக்கப்பட்டுள்ளது.

8. ஸ்ரீ லால் மீனா I மற்றும் ஸ்ரீ லால் மீனா II ஆகிய வழக்குகளில் உள்ள பொருண்மைகள், அஸ்கர் இப்ராஹிம் அமீன் வழக்கில் உள்ளதை ஒத்துள்ளது. எதிர்மேல்முறையீட்டாளரான பணியாளர், 20 ஆண்டுகாலப் பணி முடித்த பின் ராஜினாமா செய்துள்ளார். எதிர்மேல்முறையீட்டாளரின் ராஜினாமா அவரது கடந்த காலப் பணியை பறித்து, ஓய்வூதியம் பெற அவரை தகுதியற்றவர் ஆக்கிவிட்டதா அல்லது உண்மையில் விருப்ப ஓய்வா என்பதை முடிவு செய்ய நீதிமன்றம் கோரப்பட்டுள்ளது. இந்த நீதிமன்றத்தின் நீதியர் ஈராயம் சார்பாக மாண்புமிகு நீதியரசர் திரு.தீபக் மிஸ்ரா (அப்போதைய கற்றறிந்த மாண்புமிகு தலைமை நீதிபதி) ஸ்ரீ லால் மீனா I வழக்கில் கருதியதாவது:

> "28. .....ராஜினாமா என்பது ஒரு பணியாளரின் பணி முடிவு என்ற விளைவை கொண்டுள்ளது என்பதை கூற வேண்டியதில்லை. விருப்ப ஓய்வு என்பது ஒரு பணியாளரின் பணி முடிவு என்ற விளைவாக இருந்தாலும், அது வேறுபாடான விளைவுகளை ஏற்படுத்தும். முதல் நேர்வில், முன்னாள் பணியாளர் ஓய்வூதியத்திற்கு உரியவர் அல்ல, ஆனால் பிந்தைய நேர்வான விருப்ப ஓய்வில், ஒழுங்குமுறைகள் அல்லது விதிகள் அல்லது

திட்டத்தின் கீழ் உள்ள வரையறைகளைச் சார்ந்து, பணியாளர் ஓய்வூதியத்துக்கு உரியவராவார். ராஜினாமா, பணி நீக்கம், பணி விலகல், பணி முடிவு அல்லது கட்டாய ஓய்வு ஆகியவற்றில் பணியாளர் கடந்த காலப் பணிகளை இழந்து விடுவார் என்றும், மற்றும் அவர் ஓய்வூதியப் பயனுக்கு தகுதி பெற மாட்டார் என்றும் குறிப்பாக 1995 ஆம் ஆண்டைய விதியில், விதி 23 கூறுகிறது. எனவே 1995 ஆம் ஆண்டைய விதிகளின் கீழ் தரப்பட்ட ராஜினாமா ஓய்வூதியத்தை பணியாளருக்கு பெற்றுத் தராது

29. .....அஸ்கரா இப்ராஹிம் அமீன் வழக்கில் விதி 31 (விருப்ப ஓய்வில் ஓய்வூதியம்) முன் தேதியிட்டு வழங்கப்பட்டுள்ளது மற்றும் அந்த நோக்கத்திற்காக, 1960 ஆம் ஆண்டைய ஒழுங்குமுறை விதிகளின் சட்டத் திருத்தம், அதாவது, 19 (2–A) ஒழுங்குமுறை விதி மீண்டும் தொடங்கப்பட்டுள்ளது. எங்கள் கருத்தின் படி, விதி 31, விருப்ப ஓய்வு என்ற களத்தை உள்ளடக்கி, அதனை முன் தேதியிட்டு செய்யாத போது, ராஜினாமா மற்றும் ஓய்வு இடையே உண்மையான வேறுபாடு உள்ளது, அதனை முன் தேதியிட்டு செய்ய விதிகளில் திருத்தப்பட்ட ஒழுங்குமுறை விதிகளை

படிப்பது சரியல்ல. எனவே, அஸ்கர் இப்ராஹிம் அமீன் வழக்கில் சொல்லப்பட்ட கருத்துடன் நாங்கள் ஒத்துப் போக முடியவில்லை." (வலியுறுத்தப்படுகிறது)

9. விருப்ப ஓய்வு பெறும் போது ஓய்வூதியம் தொடர்பான விதி 31, முன் தேதியிட்டு பொருந்தாது, ஏனெனில், சம்பந்தப்பட்ட வகைக்கூறு முன் தேதியிட்டு ஏற்படுத்தப்படவில்லை என்ற கருத்தினை, ஸ்ரீ லால் மீனா I என்ற வழக்கில் நீதிமன்றம் எடுத்துள்ளது. விருப்ப ஓய்வை முன் தேதியிட்டு வகைக்கூறு செய்தால் மற்றும் பணியாளர் 'ராஜினாமா' செய்தாரா அல்லது 'விருப்ப ஓய்வில்' சென்றாரா என்று ஒவ்வொரு வழக்கிலும் பொருண்மைகளை முடிவு செய்ய, அஸ்கர் இப்ராஹிம் அமீன் தீர்முடிவு ராஜினாமா மற்றும் ஓய்வு இடையே உள்ள வேறுபாட்டினை அறவே நீக்குவதாக, நீதிமன்றம் முக்கியமாக கவனித்துள்ளது, "ராஜினாமா மற்றும் விருப்ப ஓய்வு இடையே உண்மையான வேறுபாடு உள்ளது" என்பதை நீதிமன்றம் கவனித்துள்ளது. அவை இடமாற்றம் செய்து பயன்படுத்தக் கூடாது மற்றும் பணியாளர் விருப்ப ஓய்வுக்கு தகுதி பெறுவதற்கான தேவையான பணி காலம் முடித்துள்ள காரணத்தால், ஒன்றுக்கு பதிலாக மற்றொன்றை மாற்றீடு செய்ய முடியாது.

10. மூன்று நீதிபதிகள் அமர்வு சார்பாக மாண்புமிகு நீதியரசர் திரு.சஞ்சய் கிஷன் கவுல், ஸ்ரீ லால் மீனா II என்ற வழக்கிலும், ஸ்ரீ லால் மீனா II என்ற வழக்கிலும் சொல்லப்பட்ட விளக்கத்தினை உறுதி செய்து, எல்.ஐ.சி. ஓய்வூதிய விதிகளில் விருப்ப ஓய்வுக்கான வகைக்கூறில் முன் தேதியிட்டு பொருத்தம் செய்வது, பொருளற்ற விளைவை ஏற்படுத்தும் என குறிப்பிட்டுள்ளார்:

> "19. இங்குள்ள முக்கிய விஷயம் என்னவென்றால், இந்த வழக்கில் பணியாளர் ராஜினாமா செய்து விட்டது தான். ஓய்வூதிய விதிகள் பொருந்தும் போது, ஒரு பணியாளர் ராஜினாமா செய்தால், அதன் விளைவுகள் ஓய்வூதிய விதிகள், விதி 23 இன் கீழ் பணிக்காலம் இழப்பாகும். எங்கள் கருத்தின் படி, எதிர்மேல்முறையீட்டாளருக்கு ஓய்வூதிய விதிகளை பொருத்த முயற்சிப்பது, சுய தோல்விக்கான வாதமாகும். ஒருவேளை, ஓய்வூதிய விதிகள் பொருத்தப்படுமேயானால் மற்றும் எதிர்மேல்முறையீட்டாளர் போன்ற பணியாளர் பணியில் இருந்து மற்றும் ராஜினாமா கோரினால், முழு கடந்த பணிக்காலத்தை

இழக்க நேரிடும் மற்றும் தொடர் விளைவாக, அவர் ஓய்வூதியப் பயனை பெற தகுதியடைய மாட்டார். மாறாக முடிவு செய்தால், விதிகள் நடப்பில் இருக்கும் போது, பணியாளர் ராஜினாமா செய்தால், ஓய்வூதியப் பயன் தவிர்க்கப்பட்டுவிடும், விதிகள் நடைமுறையில் இல்லாத போது, ராஜினாமா செய்த பணியாளருக்கு இந்த விதிகளின் பயன் தரப்பட்டதாகிவிடும்."

(வலியுறுத்தப்படுகிறது)

அஸ்கர் இப்ராஹிம் அமீன் வழக்கில் பின்பற்றப்பட்ட அணுகுமுறை, எல்.ஐ.சி. ஓய்வூதிய விதிகளை விளக்குவதில் பின்பற்றப்பட்டால், விதிகள் இயற்றப்பட்ட பின்னர் ராஜினாமா செய்த ஒரு பணியாளர் ஓய்வூதியப் பயன்பெற உரிமையுடையவர் அல்ல, ஆனால் விதிகள் அமுலில் இல்லாத போது ராஜினாமா செய்த ஒரு பணியாளர் விருப்ப ஓய்வுக்கு நிர்ணயிக்கப்பட்ட பணிக்காலத்தை முடித்திருந்ததால், ஓய்வூதியப் பயன் பெறத் தகுதியுடையவர் ஆவார் என்பதை நீதிமன்றம் கவனித்துள்ளது. அத்தகைய பலன் ஆதரவற்றதாகிவிடும் மற்றும் ராஜினாமா செய்தால் கடந்த காலப் பணியிழப்பு ஏற்படும் என வரையறுக்கும் வகைக்கூறு பயனற்றதாகிவிடும்.

11. ஸ்ரீ லால் மீனா II வழக்கில், ராஜினாமா மற்றும் விருப்ப ஓய்வு ஆகியவற்றுக்கு இடையே உள்ள வேறுபாட்டினை கீழ்க்கண்ட வரையறைகளில் நீதிமன்றம் விலக்கியுள்ளது:

> "22. ...[இந்திய ரிசர்வ் வங்கி /எதிர்/ செசில் டென்னிஸ் சாலமன் (2004) 9 எஸ்சிசி 461 என்ற வழக்கை குறிப்பிட்டு] பணி சட்டவியலில், "வயது முதிர்வு ஓய்வு", "விருப்ப ஓய்வு", "கட்டாய ஓய்வு" மற்றும் "ராஜினாமா" ஆகியவை பல மறைபொருளைத் தருகிறது. விருப்ப ஓய்வு மற்றும் ராஜினாமா பணியை விட்டு செல்ல பணியாளர் சார்பாக சுயமான செயலைக் கொண்டது. இரண்டுமே சுயமான செயல் என்றாலும், அவை வேறு விதமாக இயங்கும். அடிப்படையான ஒரு வேறுபாடு என்னவென்றால் ராஜினாமா என்பது எந்த நேரத்திலும் தரப்படலாம், ஆனால், விருப்ப ஓய்வை பொறுத்தவரை, அது குறிப்பிட்ட தகுதியான நிர்ணயிக்கப்பட்ட பணிக்காலத்திற்கு பின்னரே கோர முடியும். மற்றொரு அடிப்படையான வேறுபாடு என்னவென்றால், முந்தைய நேர்வில் சாதாரணமாக ஓய்வூதியப் பயன் மறுக்கப்படுகிறது, ஆனால் பின் கூறப்பட்டுள்ளதில் அது மறுக்கப்படுவதில்லை.

முந்தைய நேர்வில், அனுமதி அல்லது அறிவிப்பு கட்டாயம் இல்லை, பிந்தையதில், சம்பந்தப்பட்ட பணி அமர்த்துநரின் அனுமதி தேவையான நிபந்தனையாகும். ராஜினாமா என்பது இருத்தரப்பு கோட்பாடாக இருந்தாலும், மற்றும் உரிய அமைப்பால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அமலுக்கு வந்தாலும் கூட, பொதுவிதி மாறாக குறிப்பிட்ட வகைக்கூறுகளின் படி மாற்றப்படலாம்."

ராஜினாமா மற்றும் விருப்ப ஓய்வு கோட்பாடுகளுக்கு இடையே உள்ள பொருண்மை வேறுபாட்டினை மேல் சொன்ன கருத்துக்கள் படம்பிடித்துக் காட்டுகிறது. ஓய்வூதியத் திட்டங்கள் ஒரு ஒப்படைக்கப்பட்ட வடிவத்தில் நன்மை பயக்கும் சட்டத்தை உருவாக்கினாலும், குறிப்பிட்ட வகைக்கூறுகளின் வரையறைகளுக்கு மாறாக பயனுறு முடிவு இராது என நீதிமன்றம் கூட கருதியுள்ளது:

"26. மாதிரி பணி அமர்த்துநர்களாக உள்ள பொதுத்துறை நிறுவனங்களின் கோட்பாடுகளின் மீதும் மற்றும் பயன் தரும் சட்டமாக ஓய்வூதியம் தரும் வகைக்கூறுகள் மீதும் சில கருத்துக்கள் உள்ளன. (காண்க அஸ்கர் இப்ராஹிம் அமீன் /எதிர்/

எல்.ஐ.சி.) இருப்பினும், நாங்கள் மேலே சொன்ன கருத்துகளின் படி, அறநிறுவனக் கொள்கையின்படி, இந்த பிரச்சனை செயல்படுத்தப்படக் கூடாது என நாங்கள் குறிப்பிடுகிறோம். சட்டம் இயற்றும் துறை அதன் விவேகத்தில், ஒரு குறிப்பிட்ட தேதியில் இருந்து மற்றும் குறிப்பிட்ட வரையறைகள் மற்றும் நிபந்தனைகளின் படி, ஓய்வூதிய ஒழுங்கு முறைகள் என்ற வடிவத்தில் சில பயனளிக்கும் வகைக்கூறுகளை கொண்டு வரும் போது, நீக்கப்பட வேண்டிய விஷயங்கள் அதன் அமலின் போது சேர்க்கப்பட கூடாது."

அஸ்கர் இப்ராஹிம் அமீன் வழக்கிலுள்ள கருத்து ஒப்புக்கொள்ளப்படவில்லை மற்றும் விருப்ப ஓய்வு தருவதற்கான வகைக்கூறுகள் நடைமுறையில் முன் தேதியிட்டு பொருந்தாது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இந்த கருத்தின்படி, பணியிலிருந்து ஒரு பணியாளர் ராஜினாமா செய்தால், அவர் "விருப்ப ஓய்வு பெற்றாரா" அல்லது "ராஜினாமா செய்தாரா" என்ற விஷயம் குறித்த வினாவே எழாது. விருப்ப ஓய்வு பெறும் முடிவிலிருந்து ராஜினாமா செய்யும் முடிவு பொருண்மையில் மாறுபட்டது. ராஜினாமா செய்யும் முடிவானது, பொருந்தக்கூடிய

வகைக்கூறுகளின் கீழ் ராஜினாமா என்பதிலிருந்து வரும் சட்டப்பூர்வ விளைவுகளில் முடிவடையும். இந்த விளைவுகள், விருப்ப ஓய்வில் இருந்து வரும் விளைவுகளில் இருந்து மாறுபட்டது மற்றும் பணியாளரின் பணிக்காலத்தின் அடிப்படையில் அது அந்த இரண்டும் ஒன்றுக்கொன்று மாற்றாக இருக்கக் கூடாது.

12. தற்போதைய வழக்கில், முதல் எதிர்மேல்முறையீட்டாளர், 07.07.1990 அன்று, 10.07.1990 முதல் ராஜினாமா செய்துள்ளார். அவரது பணிக்கு பொருந்தக்கூடிய வகைக்கூறுகளின் கீழ் ராஜினாமாவில் இருந்து வரும் சட்ட விளைவுகளுக்கு, ராஜினாமா செய்வதால் எதிர்மேல்முறையீட்டாளர் தன்னை உட்படுத்திக்கொள்கிறார். மத்திய குடிமைப் பணிகள் ஓய்வூதிய விதிகள் 1972, [ம.கு.ப. ஓய்வூதிய விதிகள்] விதி 26 கூறுகிறது:

> "26. ராஜினாமா செய்வதினால் பணி இழப்பு:
>
> ஒரு பணி அல்லது பதவியில் இருந்து ராஜினாமா செய்வது, நியமன அமைப்பில் பொது நன்மை கருதி திரும்பப் பெற அனுமதிக்கப்பட்டால் அன்றி, கடந்த காலப் பணி இழப்பு நேரிடும்."

விதி 26 ராஜினாமா செய்தால் ஒரு பணியாளர் அவரது கடத்த பணிக் காலத்தை இழக்கிறார் எனக் கூறுகிறது. ராஜினாமா மற்றும் விருப்ப ஓய்வு ஆகியவற்றுக்கிடையே உள்ள முக்கிய வேறுபாட்டினை அது நீக்கிவிடுவதால், நீதிமன்றம் அஸ்கர் இப்ராஹிம் அமீன் வழக்கில் பின்பற்றிய அணுகுமுறை பிழையானது என நாங்கள் மேலே குறிப்பிட்டுள்ளோம். முதல் எதிர்மேல்முறையீட்டாளர் விருப்ப ஓய்வுக்கு மனுச் செய்ய தேவையான பணிக் காலத்தை முடித்துள்ளாரா என்பதல்லாமல், அவரது முடிவு ராஜினாமா செய்வதே அன்றி, விருப்ப ஓய்வு கோரும் முடிவல்ல. அவரது ராஜினாமாவை விருப்ப ஓய்வாக இந்த நீதிமன்றம் மறுவகைப்படுத்தினால், ராஜினாமா மற்றும் விருப்ப ஓய்வுக்கிடையே உள்ள கோட்பாடுகளின் வேறுபாட்டினை குழப்புவதாகவும் மற்றும் விதி 26 செயல்படுவதை பயனற்றதாக்கிவிடும். அத்தகைய அணுகுமுறை பின்பற்றப்படக்கூடாது. அதன்படி, முதல் எதிர்மேல்முறையீட்டாளர் "விருப்ப ஓய்வு பெற்றார்" என்ற தனியமர் நீதிபதியின் காண் முடிவு நீக்கறவு செய்யப்படுகிறது.

13. முதல் எதிர்மேல்முறையீட்டாளர் 20 ஆண்டுகாலப் பணி முடித்துள்ளாரா என்ற வினாவிற்கு தற்போது நாங்கள் வருகிறோம். தற்போதைய நடவடிக்கையின் போது, முதல் எதிர்மேல்முறையீட்டாளர் பிப்ரவரி 14, 1990 அன்று விருப்ப ஓய்வுக்கு மனு செய்துள்ளார் என்ற பொருண்மைக்கு எங்களது கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது. மே 25, 1990 தேதியிட்ட கடிதத்தின் வழியாக, முதல் எதிர்மேல்முறையீட்டாளர் 20 ஆண்டு காலப் பணியை முடிக்கவில்லை என்ற காரணத்தினால், முதல் எதிர்மேல்முறையீட்டாளரின் விருப்ப ஓய்வு மனு மேல்முறையீட்டாளரான பணி அமர்த்துநரால் மறுக்கப்பட்டுள்ளது. முதல் எதிர்மேல்முறையீட்டாளர் 20 ஆண்டுகள் பணிக்காலத்தை முடித்துள்ளதால், முதல் எதிர்மேல்முறையீட்டாளரின் விருப்ப ஓய்வை நிராகரித்த மேல்முறையீட்டாளரின் முடிவு சட்டத்திற்கு எதிரானது எனக் கூறப்பட்டுள்ளது.

14. இந்த வாதத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. அவருக்கு விருப்ப ஓய்வு 25.05.1990 அன்று மறுக்கப்பட்டிருந்த போதிலும், முதல் எதிர்மேல்முறையீட்டாளர் அந்த முடிவை எதிர்க்கவில்லை, ஆனால் 07.07.1990 அன்று ராஜினாமா செய்துள்ளார்; விருப்ப ஓய்வை மறுத்துள்ளது,

ராஜினாமாவினால் ஏற்படும் சட்டவிளைவுகளை மட்டுப்படுத்தாது. விருப்பு ஓய்வு மறுக்கப்பட்டது குறித்த பிரச்சனையை 25.05.1990 மற்றும் 07.07.1990 இடையே முதல் எதிர்மேல்முறையீட்டாளர் எடுத்தார் என்று காட்டும் எந்தவொரு சாட்சியமும் பதிவில் வைக்கப்படவில்லை. மாறாக, முதல் எதிர்மேல்முறையீட்டாளர் மேல்முறையீட்டாளருக்கு அனுப்பிய 01.12.1992 தேதியிட்ட சட்ட அறிவிப்பில் ராஜினாமா செய்ததை முதல் எதிர்மேல்முறையீட்டாளர் ஒப்புக் கொண்டுள்ளார். விருப்ப ஓய்வு மறுக்கப்பட்டு மற்றும் தொடர்ச்சியாக ராஜினாமா செய்து 13 ஆண்டுகளுக்கு பின்னர்தான் முதல் எதிர்மேல்முறையீட்டாளரின் நீதிப்பேராணை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த சூழ்நிலைகளில், முதல் எதிர்மேல்முறையீட்டாளர் ராஜினாமா செய்ததாக ஒப்புக்கொண்டுள்ளபோது, ஓய்வூதியப் பயன் கோர, இந்த நீதிமன்றம் முன்பு விருப்ப ஓய்வு மறுக்கப்பட்டதை கோர முடியாது.

15. முதல் எதிர்மேல்முறையீட்டாளர் 20 ஆண்டுகள் பணிபுரிந்துள்ளாரா என்ற விசயத்தில், அந்த வினாவில் தற்போதைய பிரச்சனைக்கு எந்த சட்ட விளைவுகளும் இல்லை என்றே நாங்கள் கருதுகிறோம். முதல் எதிர்மேல்முறையீட்டாளர் 20 ஆண்டுகள்

பணிபுரிந்திருந்தாலும் கூட, ம.கு.ப ஓய்வூதிய விதிகள், விதி 26–இன் கீழ் ராஜினாமா செய்ததால், அவரது கடந்த பணிக்காலம் இழக்கப்பட்டதாக உள்ளது. எனவே, முதல் எதிர்மேல்முறையீட்டாளர் ஓய்வூதியப் பயனுக்கு உரிமையுடையவர் அல்ல.

16. மேல் சொன்ன காரணங்களால், அதன்படி மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது மற்றும் டெல்லி உயர்நீதிமன்றத்தின் மே 26, 2017 தேதியிட்ட எதிர்ப்புக்குள்ளான உத்தரவு நீக்கறவு செய்யப்படுகிறது. செலவுகளுக்கு எந்த உத்தரவும் இல்லை.

மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது.

<u>பொறுப்புத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்து கொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும்

தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப்பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."